**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED CLUSTER MINES (2 NOS) OF ROUGH STONE QUARRIES NAMELY, 1) THIRU.M.SHANKAR GANESH ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 1.45.0HA LOCATED AT S.F.NO. 132 (PART 2), VENKATESHAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT AND 2) THIRU. G.SANTHAMOORTHY ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 1.55.0 HA LOCATED AT S.F. NO: 132 (PART 1), VENKATESHAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT HELD ON 27.10.2025 AT 11.00 AM ONWARDS AT M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**PROJECT DETAILS:**

| S.No | THE PROPOSED CLUSTER MINES (2 NOS) | QUARRY LEASE OVER AN EXTENT |
|---|---|---|
| 1. | Thiru.M.Shankar Ganesh Rough Stone Quarry Located At S.F.No. 132 (Part 2), Venkateshapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District | 1.45.0HA |
| 2. | Thiru. G.Santhamoorthy Rough Stone Quarry Located At S.F. No: 132 (Part 1), Venkateshapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District | 1.55.0 HA |

**PRESENT:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Smt.Akriti Sethi, IAS | : | Sub-Collector of Hosur, Krishnagiri district (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. T.Senthil Kumar | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |

| | | | |
|---|---|---|---|
| 4 | Thiru.M.Shankar Ganesh | : | The Proprietor<br>Thiru. Shankar Ganesh Rough Stone Quarry |
| 5. | Thiru. G.Santhamoorthy | | The Proprietor<br>Thiru. G.Santhamoorthy Rough Stone Quarry |
| 6. | Thiru. M. Shaik Nawaz | : | EIA Consultant,<br>M/s. Geo Exploration Mining Solutions |
| 7. | Public | : | 72 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the Proposed Cluster Mines (2 Nos.) of Rough Stone quarries namely, 1) Thiru.M.Shankar Ganesh Rough Stone Quarry lease over an Extent of 1.45.0Ha located at S.F.No. 132 (Part 2), Venkateshapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District and 2) Thiru. G.Santhamoorthy Rough Stone Quarry, lease over an Extent of 1.55.0 Ha located at at S.F. No: 132 (Part 1), Venkateshapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, “Dinathanthi” and “The New Indian Express” dated 17.09.2025 and pamphlets regarding public hearing were issued to the public of Venkatesapuram Village, Kuttalapalli Village and Menasanathotti Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same along with the Minutes of the Meeting will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri)

has initiated the Public Hearing process. Further, the project proponents was requested to explain about their proposed Grey Granite quarry project through power point presentation.

Thereafter, Thiru. M. Shaik Nawaz, EIA Consultant, M/s. Geo Exploration Mining Solutions of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Cluster Mines (2 Nos) of Rough Stone quarries project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Cluster Mines (2 Nos) of Rough Stone quarries project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru.B.V.Krishnamoorthy, (Former Village Panchyat President) Pukkasagaram Village:**

Thiru. B.V. Krishnamoorthy stated that the proposed quarries project would contribute to the development of the village and enhance rural infrastructure, and therefore, he welcomed the projects. He further requested the local residents to extend their cooperation.

He specifically requested that employment opportunities be provided to the local people. He also appealed that the quarries should be operated without affecting agricultural lands and by using water sprinklers on the mud roads.

He finally concluded his speech by stating that the quarry had not caused any harm so far and expressed his hope that this would continue in the future.

2. **Thiru. Naveen, Venkatesapuram Village:**

Thiru.Naveen has said that the he had no objection to the establishment of the quarries. He further requested that employment opportunities be provided to the people in the surrounding areas. He asked that the heavy vehicles be driven slowly, especially in areas near schools.

Furthermore, he requested that the company should help the farmers and

provide aggregate (Jalli) and stones at a concessional rate when local residents approach the quarry.

**3. Thiru. Srineevash Venkatesapuram Village:**

Thiru. Srineevash said that he welcomed the proposed quarry projects. He further requested an assurance that employment opportunities would be provided to the local people.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 07 number of petitions were received on the proposed Cluster Mines (2 Nos) of Rough Stone quarries during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Cluster Mines (2 Nos) of Rough Stone quarries project and no email representation was received in the. O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| 30/10/25 | 30/10/25 | 3/11/25 |
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Sub Collector**<br>**Krishnagiri** | **District Collector**<br>**Krishnagiri** (3/17) |

**கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், வெங்கடேசபுரம் கிராமம் புல. எண். 132 (பகுதி 2), புல. எண். 132 (பகுதி 1), ஆகிய இடங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள கல் குவாரிகளுக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 27.10.2025 அன்று, முற்பகல் 11.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், பேரிகை கிராமம், தீர்த்தம் மெயின் ரோடு எண். 344/1, 344/2, இல் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபத்தில் – நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்:**

திட்ட விவரங்கள்:

| வ. எண் | முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம் | குவாரியின் அளவு (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1. | திரு. M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி, புல. எண். 132 (பகுதி 2), வெங்கடேசபுரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 1.45.0 |
| 2. | திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி புல. எண். 132 (பகுதி 1), வெங்கடேசபுரம் கிராமம் சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், | 1.55.0 |

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஆக்ரிதி சேத்தி | : | சார் ஆட்சியர், ஓசூர். (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er. த.செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு.M.சங்கர் கணேஷ் | : | உரிமையாளர். திரு.M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு.G. சாந்தமூர்த்தி | : | உரிமையாளர். திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி |
| 6 | திரு.ம.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் மைனிங் சொலுஷன்ஸ். |
| 7 | பொதுமக்கள் | : | 72 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு.M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி மற்றும் திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் குவாரி உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 17.09.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், வெங்கடேசபுரம் கிராமம், குட்டலப்பள்ளி கிராமம், மௌசனதொட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரிக்கு உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர்., அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், திரு.M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி மற்றும்

திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு.M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி மற்றும் திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.ம.ஷேக் நவாஸ் தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் மைனிங் சொலுஷன்ஸ். அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர், அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. B.V. கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்– புக்கசாகரம் கிராமம்)**

திரு. B.V. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இக்குவாரி திட்டத்தினால் கிராமம் வளர்ச்சியடையும் என்றும் கிராமப்புற உட்கட்டமைப்புகள் மேம்படும் என்றும்,

இதனால் இக்குவாரி திட்டத்தை வரவேற்பதாக கூறினார். மேலும் உள்ளூர் மக்களும் ஒத்துழைப்பு அளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். விவசாய நிலங்களை பாதிக்காதவாறும், மண் சாலைகளில் நீர் தெளிப்பான்கள் பயன்படுத்தியும் குவாரியை இயக்குமாறு வேண்டுகோள் வைத்தார்.

இதுநாள் வரையில் குவாரையினால் எந்த பாதிப்பும் வந்ததில்லை என்றும் எதிர்காலத்திலும் அது தொடர வேண்டும் என்றும் கூறி தன் உரையை முடித்தார்.

**2. திரு. நவீன் வெங்கடேசபுரம் கிராமம்**

திரு. நவீன் அவர்கள், குவாரி வருவதனால் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கனரக வாகனங்களை மெதுவாக இயக்குமாறும் குறிப்பாக பள்ளி பகுதிகளில் மெதுவாக இயக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் விவசாயிகளுக்கு உதவுமாறும், உள்ளூர் மக்கள் குவாரியை நாடும் போது ஜல்லி, கற்கள் போன்றவற்றை மலிவு விலையில் வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**3. திரு. சீனிவாஷ் வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. சீனிவாஷ் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தை வரவேற்பதாக கூறினார். மேலும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்குமாறு உறுதி செய்துகொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், திரு.M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி மற்றும் திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 07 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. M. சங்கர் கணேஷ் ரப் ஸ்டோன் குவாரி மற்றும் திரு.G. சாந்தமூர்த்தி ரப் ஸ்டோன் குவாரி அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (signature) 3/11/2 | (signature) 30/10/25 | (signature) 3/11/21 |
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**<br>**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**<br>**ஓசூர்** | **சார் ஆட்சியர்**<br>**ஓசூர்.** | **மாவட்ட ஆட்சியர்**<br>**கிருஷ்ணகிரி** |